ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம் |
| திகதி | 2024.09.07 |

## பொருட்கள் ஏற்றுமதியாளர்கள் தமது ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கை ரூபாவாக மாற்றுவதற்கான ஏற்புடைய காலப்பகுதியைத் தளர்த்தல்

பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகளை, குறிப்பாக உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை நிலைமைகளின் அபிவிருத்திகளைப் பரிசீலனையிற்கொண்டு பொருட்கள் ஏற்றுமதியாளர்கள் தமது ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கை ரூபாவாக மாற்றுவதற்கு ஏற்புடைய காலப்பகுதியைக் கணிசமாகத் தளர்த்தி, இலங்கை மத்திய வங்கி ‘‘**2024ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பி அனுப்புதல் விதிகளை** (விதிகள்) வழங்கியுள்ளது. இது 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் நியதிகளுக்கமைய 2024.07.01ஆம் திகதியிடப்பட்ட 2391/02ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

**இவ்விதிகள் 2024.09.04 அன்று பாராளுமன்றத்தினால் அனுமதிக்கப்பட்டதுடன் அதே திகதியில் நடைமுறைக்கு வந்தன.**

இவ்விதிகள் மூலம், பொருட்கள் ஏற்றுமதியாளர்கள் தமது ஏற்றுமதிப் பெறுகைகளின் எஞ்சிய பெறுமதிகளை இலங்கை ரூபாவாக கட்டாயமாக மாற்றுவதற்கு ஏற்புடைய காலப்பகுதியானது முன்னைய விதிகளில் எடுத்துரைக்கப்பட்டிருந்த தொடர்ந்துவரும் மாதத்தின் ஏழாவது (07) நாளைக் கொண்ட காலப்பகுதிக்கு எதிராக ஏற்றுமதிப் பெறுகைகளின்/ வழங்குநர் கிடைப்பனவுகளின் கிடைப்பனவுத் திகதியிலிருந்து மூன்று (03) கலண்டர் மாதங்கள் முடிவடைந்ததன் பின்னர் (கிடைப்பனவு மாதம் உள்ளடங்கலாக) மாதத்தின் பத்தாவது (10 ஆவது) நாள் வரை நீடிக்கப்பட்டுள்ளது.

www.dfe.lk ஊடாக இவ்விதிகளைப் பார்வையிடலாம்.